**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG10 – நிலை I (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. திருவருட்பா என்னும் நூல் ஏறத்தாழ எத்தனைப் பாடல்களைக் கொண்டது?
2. கவிஞர் முடியரசனார் எந்த ஊரில் பிறந்தார்?
3. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் யார்?
4. நட்பிற்குச் சிறந்த நிலை எது?
5. கல்வி எதை அழகுபடுத்தும்?
6. முன்றுரை என்பது என்ன?
7. ஐயன் என்பவர்?
8. நெடுந்தீவு எந்த நாட்டில் உள்ளது?
9. வால்மீகி இராமாயணம் எம்மொழி நூல்?
10. வாழைத்தண்டு எத்தன்மையது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. கல்வியில் சிறந்தவருடைய நட்பு எதனைப் போன்றது?
2. உறவினரிடம் நாம் எவ்வாறு வாழ வேண்டுமென்று பழமொழி கூறுகிறது?
3. சேர,சோழ,பாண்டிய மன்னர்களின் பெருமைகளைக் கூறும் நூல்?
4. திருநாவுக்கரசர் இறைவனின் எப்பகுதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார்?
5. தமிழ் யாரிடம் தூதாகப் போனது?
6. நல்லன எல்லாம் தருவது எது?
7. மனிதன் எவற்றில் வானளவு உயர வேண்டும்?
8. வன்னிச் சிறுவன் எதனைப் புகழ்ந்து பாடினான்?

9. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
10. காஞ்சிபுரம் மிக அழகு – என்ன ஆகுபெயர்?
11. தமிழ்மொழி உதவியால் பயன்பெறும் மொழிகள் யாவை?
12. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?
13. கடல் நீர் ஏன் நீல நிறமாகத் தெரிகிறது?.
14. பதினாறுகால் மண்டபத்தைக் காப்பாற்றியவர்கள் யாவர்?
15. நிகழ்காலம் என்பது என்ன?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. முடியரசனார் தமிழ் மொழியை எவ்வாறு வாழ்த்துகிறார்?
2. ஆண்டாள் – குறிப்பு வரைக.
3. அல்லாவை இதயத்தில் வைத்துப் போற்றுவோமென உமறுப்புலவர் கூறக் காரணம் என்ன?
4. நம்பிக்கை குறித்து ஈழத்துக் கவிஞர் செயபாலன் கூறும் கருத்துகளை எழுதுக?
5. ஒருமை – பன்மை குறித்து எழுதுக.
6. வாழை இலை குறித்து எழுதுக.
7. விருந்தினர்களை வரவேற்பதில் இன்பம் காண்பவர்கள் தமிழர்கள் என்பது குறித்து குடும்ப விளக்கு கூறும் கருத்துகளை எழுதுக
8. நஞ்சு எழுதிய தேர்வுத் தாளைப் பார்த்து ஆசிரியர் ஏன் சிரித்தார்?

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. பொருளாகு பெயர் விளக்குக.
2. தூது – குறிப்பு வரைக?
3. வளமான பாரதத்தை உருவாக்க வாருங்கள்! என்று பாரதியார் விடுக்கும் அழைப்பினைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. சர்.சி.வி.இராமன் குறித்துக் கட்டுரை வரைக.
2. வினைச்சொல்லின் வகைகளை விளக்குக.

*****